4. அறிவிப்புகள்–தொடர்ச்சி

(ஆ) பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்–கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு* (Committee on Estimates), *பொதுக் கணக்குக் குழு* (Committee on Public Accounts), *பொது நிறுவனங்கள் குழு* (Committee on Public Undertakings), *அவை உரிமைக் குழு* (Committee of Privileges) *ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 2017 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 30 ஆம் நாள், திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் சட்டமன்றப் பேரவையில் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

வேட்புத் தாள்கள், 2017 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 31 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2–00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2017 ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 31 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை மாலை 5–00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ஆட்சிக் குழு/கல்விக் குழு மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை* (Senate), *ஆட்சிக் குழு* (Syndicate), *கல்விக் குழு* (Academic Council) *மற்றும் மேலாண்மைக் குழுமம்* (Board of Management) *ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அப்பல்கலைக்கழகங்களுக்கு நேர் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள எண்ணிக்கையிலான சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.*